*கவனிக்க.-* 2025.11.07 ஆம் திகதிய 2462 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி II மற்றும் IV(அ) பிரசுரிக்கப்படவில்லை.


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

**අංක 2463 - 2025 නොවැම්බර් මස 14 වැනි සිකුරාදා - 2025.11.14**

2463 ஆம் இலக்கம் - 2025 ஆம் ஆண்டு நவெம்பர் மாதம் 14 ஆந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) – உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | 2 |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 4 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகார சபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | 10 |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

**முக்கிய அறிவித்தல்கள்**

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி - வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பி வைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைத் திருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2025, திசெம்பர் மாதம் 05 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்பட வேண்டிய அறிவித்தல்கள் 2025, நவெம்பர் மாதம் 21 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**எஸ். டீ. பாண்டிகோராள,**
அரசாங்க அழுத்தகர் (பதில்).

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2025 ஆம் ஆண்டு யூன் மாதம் 09 ஆந் திகதி.

*இவ்வர்த்தமானியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*


1 - B82738 - 5403 (2025/10)

# பதவிகள் - வெற்றிடம்

## திக்வெல்லை பிரதேச சபை

## முதன்மை - திறமையற்ற சேவை வகைக்கு நாளாந்த சம்பளம் வழங்கும் அடிப்படையில் தொழிலாளர்களைப் பதிவு செய்தல்

திக்குவல்லை பிரதேச சபையில் அங்கீகரிக்கப்பட்ட பணியாளர்களுக்குள் பின்வரும் பதவிகளில் வெற்றிடங்கள் இருப்பதால் சேவைத் தேவைக்காக நாளாந்த சம்பள அடிப்படையில் பதிவு செய்வதற்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

* பணி களப்பணியாளர் - 02 பதவிகள் - இந்தப் பதவிக்கு பின்வரும் கல்வித் தகுதிகள் பூர்த்தி செய்யப்பட வேண்டும் 8 ஆம் வகுப்பு (9 ஆம் ஆண்டு) தேர்ச்சி.

மேலே குறிப்பிடப்பட்டுள்ள பதவிகளுக்கான ஏனைய தகுதிகள் பின்வருமாறு இருத்தல் வேண்டும் :

உடல் ரீதியான தகுதிகள் - தென் மாகாணத்தின் எந்தவொரு பகுதியிலும் பணியாற்றவும், அந்தப் பதவியின் கடமைகளைச் செய்யவும் உடல் ரீதியாகவும் மன ரீதியாகவும் தகுதி பெற்று இருத்தல் வேண்டும்.

ஏனைய தகைமைகள் :

(1) இலங்கைப் பிரசை ஒருவராக இருத்தல் வேண்டும்.
(2) சிறந்த நடத்தை உடைய ஒருவராக இருத்தல் வேண்டும்.
(3) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு முன்னரான 03 வருட காலம் தென் மாகாணத்துக்குள் நிரந்தர வதிவிடம் உடைய ஒருவராக இருத்தல் வேண்டும். காணப்படுகிறது என்பதை உறுதிப்படுத்தல் வேண்டும். கிராம அலுவலரால் வழங்கப்பட்ட சான்றிதழில் சம்பந்தப்பட்ட பிரதேச செயலாளரால் வழங்கப்பட்ட ஆவணத்தின் மூலம் வதிவிடத்தை உறுதிப்படுத்த வேண்டும்.
(4) விண்ணப்பம் கோரப்படும் இறுதித் திகதிக்கு அனைத்து தகைமைகளும் பூர்த்தி செய்யப்பட்டு இருத்தல் வேண்டும்.

வயது : குறைந்தபட்ச எல்லை - 18 வயது
கூடிய பட்ச எல்லை - 45 வயது

ஆட்சேர்ப்பு செய்யப்படும் முறை :

1. கட்டமைக்கப்பட்ட நேர்காணலின் போது அடிப்படைத் தகுதிகள் சரிபார்த்தல் இடம் பெறும். அடிப்படைத் தகுதிகளைப் பூர்த்தி செய்த விண்ணப்பதாரர்கள் கட்டமைக்கப்பட்ட நேர்காணல் பரீட்சையின் போது பெற்றுக் கொள்ளப்படும் புள்ளிகளின் திறமை மற்றும் வெற்றிடங்களின் எண்ணிக்கையின் அடிப்படையில் தகுதி வரிசையில் பதவிக்காக ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

2. இது 2025.12.31 ஆந் திகதி வரை சேவையைப் பெற்றுக்கொள்வதற்கு மாத்திரமாக இருத்தல்.

3. 10/2025 ஆம் இலக்க அரசாங்க நிர்வாக சுற்றறிக்கை இன் படி PL 1 பதவிக்கு நாளாந்த சம்பளம் அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்படும்.

விண்ணப்பங்களை அனுப்ப வேண்டிய முறை : இதனுடன் இணைக்கப்பட்டுள்ள விண்ணப்பப்படிவத்திற்கு ஏற்ப A4 அளவு தாளின் இரு புறத்தையும் பயன்படுத்தி தயாரிக்கப்பட்ட விண்ணப்பப் பத்திரங்களை 2025 நவெம்பர் 30 ஆந் திகதிக்கு முன் பதிவுத் தபால் மூலம் அனுப்பப்பட வேண்டும் அல்லது இந்த விண்ணப்பங்கள் வேலை நாட்களில் காலை 9.00 மணி முதல் பிற்பகல் 3.00 மணி வரை சமர்ப்பிக்கப்பட வேண்டும். அதற்கான ரசீது கோரப்பட்டு உறையின் இடது பக்கத்தில் விண்ணப்பிக்கப்பட்ட பதவிக்கு முகவரி இடப்பட வேண்டும். தாமதமான விண்ணப்பங்கள் மற்றும் முழுமையற்ற விண்ணப்பங்கள் எந்த அறிவிப்பும் இல்லாமல் நிராகரிக்கப்படும்.

| | |
|---|---|
| விண்ணப்பப் பத்திரத்துடன் அனுப்ப வேண்டிய ஆவணங்கள் : | பிறப்புச் சான்றிதழின் பிரதி/ தேசிய ஆளடையாள அட்டையின் பிரதி/ கல்விச் சான்றிதழ்களின் பிரதிகள்/ வசிப்பிடத்தை நிரூபிப்பதற்கான கிராம அலுவலர் சான்றிதழின் பிரதி. |

தகைமைகள் பூரணப்படுத்தப்படாத விண்ணப்பதாரர்களின் விண்ணப்பங்கள் எந்த வித அறிவித்தலும் இன்றி நிராகரிக்கப்படும்.

ருவன் விக்கிரமஆரச்சி,
தலைவர்,
திக்குவல்லை பிரதேச சபை.

2025, நவெம்பர் 07.

மாதிரி விண்ணப்பப்படிவம்

**பதவிக்காக பதிவு செய்வதற்கான விண்ணப்பப்படிவம்**

1. முதலெழுத்துக்களுடன் பெயர் : ..............................................................................................

   ..............................................................................................

2. முதலெழுத்துக்கள் குறிக்கும் பெயர்: ..............................................................................................

   ..............................................................................................

3. இனம் : ..............................................................................................

4. தனிப்பட்ட முகவரி : ..............................................................................................

5. தொலைபேசி இலக்கம் : .................................................

6. பிறந்த திகதி : .............................................

7. தேசிய ஆளடையாள அட்டை இல. : ...................................

8. கல்வித் தகைமைகள் : ..............................................................................................

   ..............................................................................................

   ..............................................................................................

9. வேறு தகைமைகள் : ..............................................................................................

   ..............................................................................................

   ..............................................................................................

10. அனுபவம் : ..............................................................................................

என்னால் வழங்கப்பட்டுள்ள தகவல்கள் உண்மையானதும் சரியானதும் ஆகும் எனவும், பொய்யான தகவல்கள் எதுவும் முன் வைக்கப்படவில்லை எனவும் உறுதிப்படுத்துகிறேன்.

.....................................................
விண்ணப்பதாரரின் கையொப்பம்

திகதி .......................................

11 - 257

# பொருட்கள் விற்பனவும் பிறவும்

**பகிரங்க ஏல விற்பனை**

1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 162 ஆவது பிரிவின் கீழ் கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபைக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கமைய தடை செய்து கையேற்பு செய்யப்பட்டுள்ள பின்வரும் அட்டவணையில் தரப்பட்டுள்ள அசையும் சொத்துக்கள் குறித்த சட்டத்தின் 163 ஆவது பிரிவின் கீழ் பகிரங்க ஏலத்தில் விற்பனை செய்யப்படும் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

இதற்கென கொள்வனவாளர்கள் அழைக்கப்படுகின்றனர்

**ஏல விற்பனை பற்றிய விபரங்கள்**

இடம்: கண்டி கடவத் சத்தர மற்றும் கங்கவட்ட கோறளே பிரதேச சபையின் பிரதான அலுவலகம்

திகதி: 2025.11.25

நேரம் : மு.ப. 10.30 மணி

**ஏல விற்பனைக்கென முன்வைக்கப்பட்டுள்ள பொருட்கள்**

| | |
|---|---|
| 01. சேவல் விளக்குகள் | 02 |
| 02. பிரம்பு சுளகுக் கதிரைகள் | 02 |
| 03. மிதிவண்டிகள் | 02 |
| 04. மின் விசிறி | 01 |
| 05. புல் வெட்டும் இயந்திரம் | 01 |
| 06. பலகை சாய்வு நாற்காலி | 01 |

மேலதிக விபரங்களுக்கு அம்பிட்டிய பிரதான அலுவலகத்தின் 081 2241 222 எனும் இலக்கத்துடன் தெடர்பு கொள்ளுங்கள்.

ஐ.எம்.எஸ்.கே. இதிசூரிய,
செயலாளர்,
கடவத் சதர மற்றும் கங்கவட்ட கோறளே
பிரதேச சபை.

11 - 219

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**யாழ்ப்பாணம் மாநகர சபை**

வீதவரி விதித்தல் -2026

மாநகர சபையின் தத்துவங்களை அமுல்படுத்துவதுடன், பணிகள், செயற்பணிகளை நிறைவேற்றுகின்ற யாழ்ப்பாணம் மாநகர சபையின் முதல்வர் மதிவதனி விவேகானந்தராஜா ஆகிய நான், யாழ்ப்பாணம் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286அ பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய மேற்படி சட்டத்தின் 230 (1) ஆம் பிரிவின் ஏற்பாடுகளுக்கு அமைய யாழ்ப்பாணம் மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்கு 2026 ஆம் ஆண்டுக்கு ஏற்புடையதாக வீதவரி விதிப்பதானது பின்வருமாறாக இருத்தல் வேண்டும் என்று தீர்மானிக்கின்றேன். அதாவது,

மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 238 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் யாழ்ப்பாணம் மாநகர சபைக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மாநகர சபையின் அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள சகல வீடுகள், கட்டிடங்கள், காணிகள் மற்றும் நிர்மாணிப்புகளின் வருடாந்த பெறுமதிக்கு 2025 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு /மதிப்பீட்டை 2026 ஆம் ஆண்டுக்கான விலைமதிப்பு/ மதிப்பீடாக நிறைவேற்றிக் கொள்ள வேண்டும் என்றும், மேற்படி

விலைமதிப்பின் அடிப்படையில் மாநகர சபைகள் கட்டளைச் சட்டத்தின் 286(அ) பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அக்கட்டளைச் சட்டத்தின் 230(1) ஆம் பிரிவிலுள்ள ஏற்பாடுகளுக்கு அமைய எனக்கு உரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக் கொண்டு மேற்படி ஆதனங்களில் நிலங்கள், வதிவிடங்கள் என்பவற்றுக்கு வருடாந்த பெறுமதியில் 8 சதவீதமாகவும், வர்த்தக நிலையங்களுக்கு வருடாந்த பெறுமதியில் 10 சதவீதமாகவும விதிக்கப்படல் வேண்டும் என்றும்,

மேலும், 2026 ஆம் ஆண்டில் பின்வரும் அட்டவணையில் வெளிப்படுத்தப்பட்டுள்ள ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் அவ்வாறு விதிக்கப்படுகின்ற வருடாந்த வீதவரியை யாழ்ப்பாண மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்த வேண்டும் என்றும், அவ்வாறு வருடாந்த வீதவரி 2026 ஆம் ஆண்டு சனவரி மாதம் 31 ஆம் திகதி அல்லது அதற்கு முன்னர் முழுமையாக செலுத்தப்படுமாயின், வருடாந்த வீதவரித் தொகையில் நூற்றுக்கு பத்து சதவீதமான (10%) கழிவும், அட்டவணையின் கீழ் ஒவ்வொரு காலாண்டுக்கும் எதிரே மூன்றாவது நிரலில் குறிப்பிடப்பட்டுள்ள திகதிக்கு முன்னர் குறித்த வீத வரித்தொகை யாழ்ப்பாணம் மாநகர சபையின் நிதியத்திற்குச் செலுத்தப்படுமாயின் குறித்த காலாண்டுக்குரிய தொகையில் 5% ஆன கழிவும் யாழ்ப்பாணம் மாநகர சபையினால் வழங்கப்பட வேண்டும் என்றும் காலங்களில் செலுத்தப்படாதவிடத்து வெற்றுக்காணிகள் மற்றும் வதிவிடங்கள் மீது 15% இலுமான (பதினைந்து வீதம்) மற்றும் சகல ஏனைய இடங்கள் மீது 20% இலுமான (இருபது வீதம்) விறாந்துச் செலவு அறவிடப்படும் என்றும் தீர்மானிக்கின்றேன்.

**அட்டவணை**

| *காலாண்டு* | *செலுத்த வேண்டிய திகதி* | *5% கழிவுக்கு உரித்துப் பெறும் இறுதித் திகதி* |
|---|---|---|
| முதலாவது காலாண்டு | 01.01.2026-31.03.2026 | 31.01.2026 |
| இரண்டாவது காலாண்டு | 01.04.2026-30.06.2026 | 30.04.2026 |
| மூன்றாவது காலாண்டு | 01.07.2026-30.09.2026 | 31.07.2026 |
| நான்காவது காலாண்டு | 01.10.2026-31.12.2026 | 31.10.2026 |

மதிவதனி விவேகானந்தராஜா,
மாநகர முதல்வர்,
மாநகர சபை,
யாழ்ப்பாணம்.

11 - 112

---

**கண்டி மாநகர சபை**

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கமிடப்பட்ட சன சமூக நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் சரத்து

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபரினால் அவரின் பெயருக்கு முன்னால் உள்ள சனசமூக நிலையத்தினை அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் செயற்படுத்துவதற்கு 2026 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதனை 1975 ஆம் ஆண்டின் எனக்கு இலக்கமிடப்பட்ட சனசமூக 17 ஆம் இலக்கமிடப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் சரத்தின் அத்தியாயம் 6 இன் பிரகாரம் இத்தால் அறியத் தருகின்றேன்.

அச் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் அல்லது சனசமூக நிலையத்தினை நடாத்துவதற்காக எதிர்பார்க்கப்படும் ஸ்தானத்திற்கு அருகாமையிலுள்ள அல்லது வேறு யாரேனும் ஒரு நபரினால் சனசமூக நிலையத்திற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாயின் இவ் அறிவித்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 4 கிழமைக்குள் எதிர்ப்பிற்கான காரணத்தை எழுத்து வடிவில் இரண்டு பிரதிகளில் எனக்கு சமர்ப்பிக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர்* | *சனசமூக நிலையத்தின் தலைவர் அல்லது செயலாளர்* | *சனசமூக நிலையத்தின் பெயர்* | *சனசமூக நிலையத்தினை நடாத்திச் செல்ல எதிர்பார்க்கப்படும் இடத்தின் அமைவிடம்* |
|---|---|---|---|
| செயலாளர் | செயலாளர் | ஓல்ட் டிரின்டியன்ஸ் ஸ்போட்ஸ் கிளப் | இலக்கம் 28, அஸ்கிரிய, கண்டி |

ருவன் கலபிடிய,
பதில் நகர பிதா,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2025, ஒற்றோபர் 31.

11 -166

---

**அறனாயக பிரதேச சபை**

1992 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (1) ஆம் உறுப்புரையின் கீழ் மேற்கொள்ளப்படும் அறிவித்தல்

1989 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க (விளைவாந் தன்மையான ஏற்பாடுகள்) சட்டத்தின் இரண்டாவது உறுப்புரையுடன் வாசிக்கப்பட வேண்டிய 1987 ஆம் ஆண்டு 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் 24 (1) ‘ஆ’ உறுப்புரைக்கு ஏற்ப, செயற்பாடுகள் மேற் கொள்ளப்படுவதுடன் சப்பிரகமுவ மாகாண கௌரவ ஆளுநரின் அனுமதியைப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ள CLG/LG-5/5/2/2 எனும் இலக்கம் கொண்ட 2025.07.31 ஆந் திகதியின் கடிதத்தின் மூலம் பின்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள பாதைகள் அறனாயக பிரதேச சபைக்கு சொந்தமானவையென இத்துடன் பிரகடனப்படுத்தப்படுகின்றது.

இந்த அடையாளப்படுத்தப்பட்டுள்ள பாதைகள். யாராயினும் ஒரு காணியின் ஊடாகவோ அந்தக் காணியின் உரிமையாளர் என உரிமைகோரும் யாராயினும் ஒரு பிரிவினர் யாதாயினும் ஆயின் இந்த அறிவித்தல் வெளியிடப்பட்டு மூன்று மாதகாலத்திற்குள் அந்தக் காணிக்கு உரிய உரிமையை நிரூபிப்பதற்காக யாதேனும் நீதிமன்றத்தில் வழக்குத் தொடுத்து எதிர்ப்பை வெளியிட வேண்டுமென பிரதேச சபைச் சட்டத்தின் 24 (2) ஆம் உறுப்புரைக்கு ஏற்ப இத்துடன் அறிவித்தல் விடுக்கப்படுகின்றது.

எம்.பி. மஞ்சுல செனவிரத்ன,
தலைவர்,
பிரதேச சபை,
அறனாயக.

பிரதேச சபை அலுவலகம்,
அறனாயக,
2025, நவெம்பர் 03.

| | |
|---|---|
| பாதையின் பெயர் | : பெஹினிபெத்தர போபிட்டிகொட பாதை |
| பாதையின் ஆரம்பம் | : பெஹினிபெத்தர பழைய கம்சா பாதை |
| பாதையின் முடிவு | : பேபிட்டிகொட வரை |
| கிராம அலுவலர் பிரிவு | : பெஹினிபெத்தர 45 சீ |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : நீளம் 239 மீற்றர் அகலம் : 08 அடி |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை வலது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர்கள் |
|---|---|
| 1. திரு. ஜயசுமன அபேவீர | கலஹிட்டியாவ கும்புற |
| 2. திரு. ஆர்.பீ.சீ.ராஜபக்ஷ | தெலஹிட்டியாவ |
| 3. திரு. ஆர்.பீ.கே ராஜபக்ஷ | போபிட்டிகொடவத்த |
| 4. திரு. டப்லியூ. விஜேரன் | போபிட்டிகொடவத்த |
| 5. திரு. ஆர். பீ. திலகரத்ன | போபிட்டிகொடவத்த |
| 6. திரு. எச்பீ. சுனில் விக்ரமசிங்க | போபிட்டிகொடவத்த |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை இடது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர்கள் |
|---|---|
| 1. திரு. எம். பீ. லயனல் | கொலபெலவத்த |
| 2. திரு. ஆர்.பீ.சீ. ராஜபக்ஷ | போபிட்டிகொடவத்த |
| 3. திரு. ஆர்.பீ. சம்பத் குமாரதாச | போபிட்டிகொடவத்த |
| 4. திரு. ஆர். பீ. சமந்த குமார | போபிட்டிகொடவத்த |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2025.05.25 ஆந் திகதி அளக்கப்பட்ட காணித் துண்டின் 1775 ஆம் இலக்க படவரைவிற்கு ஏற்பவாகும்.

| | |
|---|---|
| பாதையின் பெயர் | : உடஹவத்த பாதை |
| பாதையின் ஆரம்பம் | : பிமிகனடிய |
| பாதையின் முடிவு | : உடஹவத்த |
| கிராம அலுவலர் பிரிவு | : கெட்டபேரிகந்த |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : நீளம் 85 மீற்றர் அகலம் : 08 அடி |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை வலது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திருமதி எம்.பீ. ப்ரியானி பண்டார | உடஹவத்த |
| 2. திரு. எச்.பீ. ரணசிங்ஹ | |
| 3. திரு. ஏ.வி. சம்பத் | |
| 4. திருமதி எம்.பீ. ப்ரியானி பண்டார | உடஹவத்த |
| 5. திரு. எம்.பீ. உபாலி சமரவீர | உடஹவத்த |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை இடது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. கே.ஜி.யு.ஜி. விக்ரமசிங்ஹ | குரஹன்கொட்டுவ |
| 2. திரு. ஏ.வி. அசங்க ரவீந்திர | உடஹவத்த |
| 3. திருமதி எம்.ஜி. ப்ரியானி பண்டார | உடஹவத்த |
| 4. லீலாரத்ன | உடஹவத்த |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திரு. எச். எம். ஆர். டீ. கே. ஹேரத் அவர்களின் 2025.05.25 ஆந் திகதி அளக்கப்பட்ட காணித் துண்டின் 1773 ஆம் இலக்க படவரைவிற்கு ஏற்பவாகும்.

| | |
|---|---|
| பாதையின் பெயர் | :தல்கமுவ கரஹன்பிட்டிகொட மாலியத்தவத்த பாதை |
| பாதையின் ஆரம்பம் | : தல்கமுவ கரஹன்பிட்டிகொட பாதை |
| பாதையின் முடிவு | : கரஹன்பிட்டிகொட விகாரை வரை |

| | |
|---|---|
| கிராம அலுவலர் பிரிவு | : 33ஏ - தல்கமுவ |
| பாதையின் நீளம் மற்றும் அகலம் | : நீளம் 332 மீற்றர், அகலம் : 09 அடி |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை வலது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. வி.டீ . சிரிசேன | கலவிமகேவத்த |
| 2. திரு. பீ.ஜி. தர்மதாச | மனன்னலாகேவத்த |
| 3. திருமதி எம். லயிசா | மனன்னலாகே ஹிட்டினாவத்த |
| 4. திரு. அபேகோன் | பொல்பிட்டியவத்த |
| 5. கெத்தாராம விகாரை | பன்சலவத்த |

பாதையின் ஆரம்பத்தில் இருந்து கடைசி வரை இடது பக்கமாக உள்ள காணி உரிமையாளர்களின் பெயர்கள்

| காணி உரிமையாளர் பெயர் | காணியின் பெயர் |
|---|---|
| 1. திரு. மஹிந்த வர்ணகுலசூரிய | கலேகெட்டுவத்த |
| 2. திரு. ஆரியரத்ன | ஷில்பவத்த |
| 3. திரு. கே.ஜி.எல் ரணசிங்ஹ | பன்சலேவத்த |
| 4. திரு. லலித் எஸ் ஆரியரத்ன | பன்சலேவத்த |
| 5. திரு. பீ.எம். கருணாசேன | பல்லெஹாகெதரவத்த |
| 6. திரு. எம். ஜினதாஸ் | பல்லெஹாகெதரவத்த |
| 7. திரு. கே.ஜி.ஏ. ஜயவிக்ரம | பல்லெஹாகெதரவத்த |
| 8. திரு. ஆரியரத்ன | பல்லெஹாகெதரவத்த |
| 9. திரு. ஹோரத் | |
| 10. திருமதி ஏ.டி. தீபிகா பனேன்டொ | மாலியத்தேவத்த |

அதிகாரம் பெற்ற நில அளவையாளர் திருமதி பீ இந்திராணி மல்லிகா அவர்களின் 2024.08.12 ஆந் திகதி அளக்கப்பட்ட காணித் துண்டின் 5505 ஆம் இலக்க படவரைவிற்கு ஏற்பவாகும்.

11-167

---

## தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை

### வரவு செலவுத் திட்ட வரைவு ஆவணம் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது - 2026

தெஹிஅத்தகண்டிய பிரதேச சபையின் 2026 ஆம் ஆண்டிற்கான வரவு செலவுத் திட்டப் பதிவேடு 2025 நவெம்பர் 14 இல் இருந்து 2025, நவெம்பர் 24 வரை (அரசு விடுமுறை மற்றும் ஞாயிற்றுக்கிழமைகள் தவிர ) தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை அலுவலகம் மற்றும் தெஹிஅத்தகண்டி பிரதேச சபை பொது நூலகம் என்பனவற்றில் அலுவலக நேரங்களில் பொதுமக்களின் பார்வைக்காக வைக்கப்பட்டுள்ளதாக இதன் மூலம் பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்கிறேன்.

எச்.எம்.கயான் தர்ஷண,
தலைவர்,
தெஹிஅத்தகண்டிய பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
தெஹிஅத்தகண்டிய,
2025, நவெம்பர் 07.

11-181

**இரத்தினபுரி மாநகர சபை**

வரைவுப்பாதீடு - 2026

மாநகர சபை நியதிச்சட்டத்தின் 252 ஆம் அத்தியாயத்தின் கீழ் 212 (ஆ) ஆம் பிரிவின் பிரகாரம் இரத்தினபுரி மாநகர சபையின் 2026 ஆம் நிதி வருடத்துக்குரிய வரைவுப்பாதீடு 2025, நவெம்பர் மாதம் 21 ஆம் திகதி இறுதி கவனத்திற்காக சமர்ப்பிக்கப்படுவதுடன் பொதுமக்கள் பரிசீலனைக்கென 2025, நவெம்பர் மாதம் 14 ஆம் திகதி தொடங்கி 7 நாட்கள் வரை இரத்தினபுரி மாநகரசபை அலுவலகத்தில் திறந்துவைக்கப்பட்டிருக்கும் என்பதை இத்தால் அறியத்தருகின்றோம்.

கே.வி.டி.ஆர் இந்திரஜித் கட்டுகம்பல,
மாநகர சபை ஆணையாளர்,
இரத்தினபுரி.

மாநகர சபை அலுவலகம்,
இரத்தினபுரி,
2025, நவெம்பர் 07.

11 - 220

---

**கண்டி மாநகர சபை**

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கமிடப்பட்ட சன சமூக நிலையங்களுக்கு அனுமதிப்பத்திரம் வழங்கும் சரத்து

கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபரினால் அவரின் பெயருக்கு முன்னால் உள்ள சனசமூக நிலையத்தினை அதில் குறிப்பிடப்பட்டுள்ள இடத்தில் செயற்படுத்துவதற்கு 2026 ஆம் ஆண்டிற்கான அனுமதிப் பத்திரத்தை பெற்றுக் கொள்வதற்கான விண்ணப்பப்படிவம் ஒன்று எனக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது என்பதனை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்கமிடப்பட்ட சனசமூக நிலையங்களுக்கு அனுமதிப் பத்திரம் வழங்கும் சரத்தின் அத்தியாயம் 6 இன் பிரகாரம் இத்தால் அறியத் தருகின்றேன் .

அச் சனசமூக நிலையத்திற்கு அருகாமையில் அல்லது சனசமுக நிலையத்தினை நடாத்துவதற்காக எதிர்பார்க்கப்படும் ஸ்தானத்திற்கு அருகாமையிலுள்ள அல்லது வேறு யாரேனும் ஒரு நபரினால் சனசமூக நிலையத்திற்கு அனுமதிப் பத்திரம் வழங்குவதற்கு எதிர்ப்பு தெரிவிப்பதாயின் இவ் அறிவித்தலுக்கான வர்த்தமானி அறிவித்தல் பிரகடனப்படுத்தப்பட்ட திகதியிலிருந்து 4 கிழமைக்குள் எதிர்ப்பிற்கான காரணத்தை எழுத்து வடிவில் இரண்டு பிரதிகளில் எனக்கு சமர்ப்பிக்கும் படி கேட்டுக் கொள்கின்றேன்.

**அட்டவணை**

| *விண்ணப்பதாரியின் பெயர்* | *சனசமூக நிலையத்தின் தலைவர் அல்லது செயலாளர்* | *சனசமுக நிலையத்தின் பெயர்* | *சனசமூக நிலையத்தினை நடாத்திச் செல்ல எதிர்பார்க்கப்படும் இடத்தின் அமைவிடம்* |
|---|---|---|---|
| செயலாளர் | செயலாளர் | ஓல்ட் டிரின்டியன்ஸ் ஸ்போட்ஸ் கிளப் | இலக்கம் 28. அஸ்கிரிய, கண்டி |

ருவன் கலபிடிய,
பதில் நகர பிதா,
கண்டி மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
கண்டி,
2025, ஒற்றோபர் 31.

11-221

---

**மாத்தறை மாநகரசபை**

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களின் உரிதிப்பத்திரம் வழங்கும் சட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்படப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்படப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் செல்வதற்கு 2026 ஆம் ஆண்டிற்கான உரிதிப்பத்திரம்

பெற்றுக்கொள்வதற்காக வண்ணப்பிட்டுள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டுன் 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உரிதிப்பத்திரம் வழங்கும் சட்டதிதின் (06) ஆம் பிரிவின் “ஆ” அத்தியத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.

இந்த சங்கங்களுக்கு அருகாமையிலே, குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிரிபார்க்கப்பட்ட இடங்கனிலோ வதியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புகள் தெரிவிக்கப்டுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 04 கிழமைக்குள் தகுத்த மறுப்புக் காரணங்கள் காட்டி எனக்கு எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தருமாறு இத்துடன் அறியத்தருகிறேன்.

நெலுமி ஏ.கமகே,
நகர ஆணையாளர்,
மாத்தறை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2025, நவெம்பர் 06.

**அட்டவணை**

| *விண்ணபப்பதாரியின பெயர்* | *சங்கத் தலைவர் முகாமையாளர்/ செயலாளர்* | *சங்கத்தின் பெயர்* | *சங்கம் நடாத்தப்படும் இடம்* |
|---|---|---|---|
| 1. கே.எஸ். சுனில் | செயலாளர் | ஓ அசிஸ் விளையாட்டு சங்கம் | இல.76, ராகுல வீதி, மாத்தறை |

11 - 228

---

**கம்பஹா மகா நகர சபை**

வரவு செலவுத் திட்டம் - 2026

252 ஆம் அதிகாரம் கொண்ட மாநகர சபைக் கட்டளைச் சட்டத்தின் 212 (b) பிரிவின்படி, கம்பஹா மாநகர சபையின் 2026 ஆம் ஆன்டிற்கான வேலைத்திட்ட வரவு செலவுத்திட்டம் 2025.11.17 ஆம் திகதியிலிருந்து 07 நாட்தளுக்கு பொது மக்களின் பார்வைக்காக இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ளது என்பதை இதன் மூலம் தெரிவித்துக்கொன்கிறேன்.

எரிக் லக்ஷ்மன் எதிரிவிக்ரம,
மேயர்.

மா நகரசபை அலுவலகம்,
கம்பஹா,
2026, நவெம்பர் 14.

11 - 263